## சேலம் மத்திய மாவட்டம் –

# ஓமலூர் தொகுதியில் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரைக் கூட்டம்!

## அமைச்சர் கோவி.செழியன் சிறப்புரையாற்றினார்!




சேலம், பிப்.4-

தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் பரப்புரை கூட்டம் காடையாம்பட்டி பகுதியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு உயர்கல்வி துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில்தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டும் வகையில் பொது மக்களுக்கு அல்வா கொடுக்கப்பட்டு ஒன்றிய அரசுக்கு எதிரான துண்டு பிரசுரம் விநியோகிக்கபட்டது.

கூட்டத்தில் அமைச்சர் கோவி. செழியன் பேசும் போது, வரும் தேர்தலில் தமிழகத்தை ஆள போவது தமிழ்நாடா அல்லது டெல்லியா என்பதை நிரூபிக்கும் தேர்தல் என்று ஆரியம் ஆள அதிமுகவை அடிமை யாக்கி விட்டார் எடப்பாடி பழனிசாமி என்று குற்றம் சாட்டினார். மாநில சுயாட்சி உள்ளிட்ட தமிழகத்தின் உரிமையை காக்கும் கட்சி திமுகவை தவிர வேறு யார் உள்ளார் என்று கேள்வி எழுப்பிய அவர் பெண்களுக்கு என்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும் உள்ள ஒரே கட்சி திமுக மட்டுமே என்று பேசிய அவர் இந்தியாவிலேயே ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாத தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும் பெருமிதத்தோடு பேசினார்.

ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு ஒரு அறிவிப்பும் வரவில்லை. கல்விக்கு கொடுக்க வேண்டிய நிதியை கூட தரவில்லை, குடிநீர் இணைப்புக்கும் நிதி தரவில்லை நூறு நாள் வேலைக்கு முட்டு கட்டை போடும் பாஜக மற்றும் அதற்கு துணை போகும் அதிமுகவை விரட்டி அடிக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார். ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை என்றாலும் தமிழகத்தின் வளர்ச்சி அடைய செய்து உள்ளார் என்றார். ஒன்றிய அரசுக்கு மாநில பாடம் கற்பிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார்.. அதிமுக ஆட்சியில் தமிழ்நாட்டை அடகு வைத்து இருந்த நிலையை மாற்றி தமிழ்நாடு தலை குனியாது என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருபவர் முதலமைச்சர் என்று பெருமிதத்தோடு கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன், ஓமலூர் தொகுதி பார்வையாளர் சுகவனம், ஒன்றிய செயலாளர் அறிவழகன், ரமேஷ், ரவிச்சந்திரன், ACM செல்வகுமார், ராஜா ஐயப்பன்,பாலசுப்பிரமணியம், பெருமாள் ,KR பிரபாகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## 98 சதவிகிதப் பணிகள் நிறைவடைந்த நிலையிலும்

# தூத்துக்குடி இ.எஸ்.ஐ. மருத்துவமனை - பணியாளர் பற்றாக்குறையால் செயல்படவில்லை!

## மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி குற்றச்சாட்டு!

**சென்னை, பிப்.4–**

**98 சதவிகித பணிகள் நிறைவடைந்த நிலையிலும், பணியாளர் பற்றாக்குறையால் தூத்துக்குடி இ.எஸ்.ஐ. மருத்துவமனை இன்னும் செயல்படவில்லை என கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.**

தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவையில், தூத்துக்குடியில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் பணிகள் 98 சதவீதம் நிறைவடைந்த நிலையிலும், மருத்துவ கண்காணிப்பாளர், வெளிநோயாளிகள் பிரிவு ஊழியர்கள் மற்றும் பிற சேவைப் பணியாளர்கள் உள்ளிட்டோர் இன்னும் நியமிக்கப்படாததால், அந்த மருத்துவமனை செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை.



தேவையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டால், மருத்துவமனை செயல்படத் தொடங்கும். இதுகுறித்து எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா? என கேட்டுக் கொண்டார்.

“இதற்கு பதிலளித்த தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மூன்று மாதங்களுக்குள் மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், மார்ச் மாத இறுதிக்குள் அந்த மருத்துவமனை செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்தார்.

## திருச்சியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில்!






திருச்சி, பிப்.4-

பேரறிஞர் அண்ணாவின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளரும், பள்ளி கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகளுடன் சத்திரம் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள காமராஜர் சிலையில் இருந்து மௌன ஊர்வலமாக புறப்பட்டு சிந்தாமணி பகுதியில் அமைந்துள்ள அண்ணாசிலைக்கு சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே என் சேகரன், சபியுல்லா, பகுதி கழகச் செயலாளர் மோகன் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.... இன்று மௌன ஊர்வலமாக வந்து அண்ணா சிலைக்கு அஞ்சலி செலுத்தி உள்ளோம். எங்களது உறுதிமொழியாக 2026ல் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்ற கோரிக்கையுடனும், கலைஞரின் ஐம்பெரும் முழக்கங்களையும் இங்கே எழுப்பியிருக்கிறோம்.

இந்த ஆண்டு முதல்வர் கூறியது போல் கருத்து கணிப்புகள் எல்லாம் கடந்து இன்னும் அதிகமான இடங்களில் நாங்கள் வெல்வோம் நாட்டு மக்களுக்காக தொடர்ந்து நாங்கள் உழைப்போம் மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்றார்.

இந்தியா முழுவதும் மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கக்கூடிய நிதி என்பது 41% இருந்து 50 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டும். 16ஆவது நிதி குழுவிலாவது அதை சரி செய்யப்படும் என நினைத்தோம் ஆனால் இந்த பட்ஜெட்டிலும் 41 சதவீதமே தொடர்கிறது என்பது கவலை அளிக்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக அந்த 41யும் பிரித்து தரும்பொழுது தமிழ்நாட்டிற்கு வெறும் 4.097 சதவீதம் தான் நாங்கள் கட்டும் வரிப்பணத்திற்கு திருப்பி தரப்படுகிறது என்றால் திட்டங்களை எப்படி எங்களால் செயல்படுத்த முடியும்.

நாங்கள் எதிர்பார்த்த மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட பல பெரிய பெரிய ப்ராஜெக்ட் களுக்கான எந்த நிதியையும் வழங்காமல் குறிப்பாக பள்ளி கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய 3548 கோடி ரூபாயை பற்றி இந்த பட்ஜெட்டில் எதுவுமே இல்லை சிறப்பாக செயல்பட்ட ஜல்ஜீவன் மிஷின் சார்பாக 3112 கோடிகளை வழங்காமலும், திருச்சியில் உள்ள இரண்டு அமைச்சர்கள் சார்ந்துள்ள துறைக்கு வழங்க வேண்டிய நிதி வழங்கப்படாமல் உள்ளது என்றால் இது எப்படிப் பட்ட பட்ஜெட் என்றார்.

விவசாயிகளாக இருந்தாலும், ஏழை எளிய மக்களாக இருந்தாலும் எல்லா தரப்பினருக்கும் ஏமாற்றம் அளிக்கக் கூடிய ஒரு பட்ஜெட்டாக தான் இது அமைந்திருக்கிறது என்றார்.

## “தமிழ்நாடு தலைகுனியாது” – வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# கிருஷ்ணராயபுரம் தொகுதி - பாலவிடுதியில் பிரச்சாரம்!

## ஏ.கே.எஸ்.விஜயன் சிறப்புரை!

கரூர், பிப்.4-

“தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரை பிரமாண்ட போதுக்கூட்டம் கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதி பாலவிடுதியில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தலைமை வகித்தார். கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாட்டின் உரிமைக்கான குரலை தரணியெங்கும் ஒலிக்கச் செய்யவும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பட்டிதொட்டியெங்கும் பறைசாற்றவும், நடைபெறும் #தமிழ்நாடு_தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி பாலவிடுதியில் நடைபெற்றது.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி வரவேற்றார், கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் சிறப்புரையாற்றினார், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தலைமை வைத்து பேசினார் ஏ.கே.எஸ் விஜயன் பேசியதாவது:

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். இதை புரிந்து கொள்ளாமல் யார் யாரோ ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இங்கே செந்தில்பாலாஜி அவர்கள் அதனை பட்டியல் போட்டு சொன்னார்கள். கரூர் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.4500 கோடி மதிப்பீட்டில் திட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

ஒரு காலத்தில் தமிழ்நாட்டின் வரவு செலவுத் திட்டமே இவ்வளவு 4,500 கோடி தான். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது சாணி பாலை குடித்து, சவுக்கடி வாங்கிக் கொண்டும் இருக்கிறோம். எங்களுக்கெல்லாம் வீட்டு மனை பட்டா வேண்டும் என மக்கள் கோரிக்கை வைத்தார்கள். அப்போது உடனடியாக ஒரே கையெழுத்தில் 40 ஆயிரம் பேருக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கியவர் கலைஞர் அவர்கள். அவரது வழியில் நமது முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

கொரோனா காலத்தில் மக்களை பரிதவிக்க விட்டனர். மாநிலத்தில் இருந்த எடப்பாடி அரசும் ஒன்றும் செய்யவில்லை. ஒன்றிய மோடி அரசோ கைதட்டுங்கள், விளக்கு ஏற்றுங்கள் என்று கூறிவிட்டு போய் விட்டனர். மக்கள் பெருந்தொற்றுக்கு பலியானார்கள். எனது உதவியாளர் கூட மருத்துவமனையில் இடம் கிடைக்காமல் இறந்து விட்டார். ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே கொரோனா வார்டுக்கே துணிச்சலுடன் சென்று நம்பிக்கை ஏற்படுத்தினார்கள். அதற்கு முன்னால் இருந்த எடப்பாடி அரசு செய்யாததை எல்லாம் செய்து காட்டினார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் உதவி தொகை, நிவாரணம் என அடுக்கடுக்கான திட்டங்களை வழங்கி மக்களை காப்பாற்றியவர் நமது முதலமைச்சர் அவர்கள். இதுதான் எடப்பாடிக்கும் நமது முதலமைச்சர் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயிரம் ரூபாய் மகளிர் உதவி தொகை என கழகம் கூறிய போது அதை நிறைவேற்ற முடியாத திட்டம் என்று கூறியவர் தான் எடப்பாடி.

கரூரில் கூட்டம் நடத்தி 40 பேர் இறந்த போது அனைவரும் ஓடிவிட்டனர். இங்கிருந்து உதவி அல்லவா செய்திருக்க வேண்டும். ஆனால் ஓடோடி சென்று மக்களை காப்பாற்றி உதவி செய்தவர் செந்தில் பாலாஜி. மனிதாபிமானத்தோடு கழகத்தினர் உதவி செய்தனர். முதலமைச்சர் அவர்கள் இரவோடு இரவாக கரூர் வந்து பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்கள். மருத்துவ வசதிகள், உதவி தொகைகள் என உடனடி நடவடிக்கையினை எடுத்தார்கள். அரசியலை பார்க்கவில்லை. மக்களைத்தான் பார்த்தார்கள்.

ஆனால் ஒருவர் சிபிஐ விசாரணைக்கு போய்விட்டு வந்து அமைதியாக ஆகிவிட்டார். சிபிஐ எப்படி விசாரணை நடத்துவார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். மக்களோடு இருப்பது கழகம் மட்டும் தான். மீண்டும் கழக ஆட்சி அமைதி உறுதி.

இவ்வாறு அவர் பேசினார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர், வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேசியதாவது:

கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து மாவட்டத்திற்கான திட்டங்களை கேட்டுப்பெற்று நிறைவேற்றி உள்ளோம். தேவையான திட்டங்களை அனைத்தையும் நிறைவேற்றி தந்தவர் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். கரூர் மாவட்டத்திற்கு ரூ. 4500 கோடி மதிப்பீட்டில் திட்டங்களை வாரி வழங்கியவர் நமது முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள்.

இன்னும் என்னென்ன வேண்டும் என்று கேட்டால் அதையும் வழங்க தயாராக உள்ளார்கள். பெண்களுக்கு மாதம் ரூ.1000 கொடுக்க முடியாது என்று கூறியவர் தான்எடப்பாடி பழனிசாமி. ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமை தொகையினை வழங்கி வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் விடுபட்டவர்களுக்கும் தந்துள்ளார்கள். இன்னும் மேல்முறையீடு செய்தவர்களுக்கும் வழங்குவார்கள். இது மகளிருக்கான அரசு. திராவிட மாடல் அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி மக்கள் நம்பிக்கையை பெற்றுள்ளது. மீண்டும் கழக ஆட்சி அமையும். மக்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

எம்எல்ஏ பிஆர். இளங்கோ, க. சிவகாம சுந்தரி, தொகுதி பார்வையாளர் அம்பாள் நந்தகுமார், நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார், மாவட்டக் கழக நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம்எஸ்கே. கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரிசுப்பிரமணி, பிவி.பாரத்,

செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என். செல்வராஜ், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் க.சுப்பிரமணியன், கோல்ட்ஸ்பாட் ஆர்எஸ். ராஜா, ஆர். ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், எம். பாண்டியன், ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் எஸ்.சுதாகர், இ.ராமர், எம்எஸ். மணியன், கே.கருணாநிதி, எம். ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவிராஜா, கே. பாஸ்கரன், எம்.ராமலிங்கம், என்.மணிகண்டன், த. கார்த்திக், சி.வளர்மதி, பி. முத்துக்குமாரசாமி, விகே. வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், அ. குணசேகரன், வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், விகேடி .ராஜ் கண்ணு, கே. வேலுச்சாமி, கே. சாமிநாதன், சி.கருப்பையா, பிபி. சரவணன், சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என். ராமலிங்கம், சிவ காமசுந்தரி, கலவதி சக்திவேல், பிஏ.குமார், முன்னாள் எம்எல்ஏக்கள் காமராஜ், கீதா மணிவண்ணன்,

பேரூர் செயலாளர்கள் கே. அம்மையப்பன், கே.முரளிராஜா, இ. ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி, அணிகளின் அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், நந்தினி தேவி, தாசப்பிரகாஷ், சுப்பிரமணியன்,

தென்னிலை பாலு, பி. சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ அப்பாசாமி, ஆர்.தியாகராஜன், எம். பிரின்சி, சி.நவாஸ்கான், மா. அம்பிகாபதி, தம்பிசுதாகர், எம். விக்ரம், கு.வடிவேல், எஸ். செல்வராஜ், சாவிநல்லுசாமி, எஸ். மனோகர், எம்ஆர்எஸ். சுரேஷ், பங்க் சுப்பிரமணி, விஆர்.அண்ணா வேலு, மற்றும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்துக் கொள்ள மிகச்சிறப்பாக நடைபெற்றது.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்டசமூக சேவகர்கள், கல்வியாளர்கள், கொடையாளர்கள், தொழில் முனைவோர், தன்னார்வலர்கள், மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன், நல்லாட்சியின் சாதனைகளை விளக்கி, அவர்களின் கருத்துக்களை அறியும் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ கலந்துரையாடல் கூட்டம் உப்பிடமங்கலம் சக்தி மஹாலில் நடைபெற்றது. கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ, சிறப்புரையாற்றினர். கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் . க. சிவகாமசுந்தரி, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர் இளங்கோ, நிர்வாகிகள் நன்னியூர் ராஜேந்திரன், நந்தகுமார், ஒன்றிய செயலாளர்கள் எம். ரகுநாதன், எஸ். சுதாகர், எம்.ராமலிங்கம், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், மாவட்டத் துணைச் செயலாளர் பூவை ரமேஷ் பாபு,முன்னாள் எம்எல்ஏக்கள் காமராஜ், கீதா மணிவண்ணன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அ.நடராஜன் தலைமையில்

# பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வீ.ஜெகதீசன் - எம். பிரபாகரன் எம்.எல்.ஏ. தங்க சித்தார்த்தன் பங்கேற்பு!

பெரம்பலூர், பிப்.4-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் தங்க.சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, டி.கே. ராமச்சந்திரன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன்,

அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர், லெப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஏ.எஸ். ஜாகிர்உசேன்,

குரும்பலூர் பேரூர் கழகச் செயலாளர் எம்.வெங்கடேசன்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட இளைஞர் அணி

துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், டி.ஆர்.சிவசங்கர், மா.பிரபாகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர். முத்தரசன்,

ஏ.எம்.கே.கரிகாலன், சி. காட்டுராசா, வெ.கார்மேகம், டாக்டர்அ.கருணாநிதி, காடூர்.கவியரசு, ஆர்.சுந்தர்ராஜ், வெ.ரமேஷ், மகாதேவி ஜெயபால், மாவட்ட வெ.கார்மேகம், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது!

பெரம்பலூர் மாவட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, “தமிழ்நாடு வெல்லும்” எனும் தலைப்பில் நடைபெறும் பொதுக் கூட்டங்களை சிறப்பாக நடத்துவது எனவும்,

பிப்ரவரி01 முதல் மகளிர் அணி சார்பில் “வெல்லும் தமிழ் நாடு” பிரச்சாரத்தை அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பாக நடத்துவது எனவும்,

பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள BLA2,BDA முகவர்களுக்கான பட்டியலை உடனடியாக வழங்குமாறு நிர்வாகிகளை

கேட்டுக்கொள்வது எனவும், கடந்த 26ஆம் தேதி வெல்லும் பெண்கள் டெல்டா மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

மார்ச் 8, திருச்சியில் நடைபெறும் மண்டல மாநாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து திரளாக கலந்து கொள்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.